***DEPOSITION OF WITNESS***

***(Chapter XXIII Code of Criminal Procedure)***

***IN THE COURT OF CHIEF JUDICIAL MAGISTRATE, KARUR***

| | | |
|---|---|---|
| CC | : | *33/ 2025* |
| Deposition of Witness for | : | *PW. 4 (LW-2 )* |
| Name | : | குப்புசாமி |
| Father's Name | : | குமார் |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |
| Accused | : | எதிரி ஆஜர் |

*Solemnly affirmed in accordance with the provision of Act X of 1973 of that 9th day of July 2026.*

**முதல் விசாரணை:**

நான் சாலைப்பாளையத்தில் வசிக்கின்றேன். ஜவுளி வியாபாரம் செய்கின்றேன். கணேசன் என்பவர் எனது உறவினர் ஆவார். 04.06.2024–ம் தேதி நானும், கணேசன் என்பவரும் சொந்த வேலையாக கரூர் சென்றுவிட்டு எங்கள் ஊரை நோக்கி கணேசன் என்பவருக்கு சொந்தமான இரு சக்கர வாகனத்தில் வந்து கொண்டிருந்தோம். கணேசன் என்பவர் வாகனத்தை ஓட்டினார். நான் பின்னால் அமர்ந்து வந்தேன். சுமார் 10 மீட்டருக்கு முன்பாக எங்கள் ஊரை சேர்ந்த சுப்பிரமணி என்பவர் அவரது இரு சக்கர வாகனத்தில் அவரது மூத்த மகனை பின்னால் அமர வைத்துக் கொண்டு சென்று கொண்டிருந்தார். பகல் சுமார் 11.30 மணியளவில் வேப்பம்பாளையம் பிரிவு சரவணா மெஸ் எதிரில் சுப்பிரமணி என்பவர் வலதுபுறம் திரும்புவதற்காக கையை காண்பித்துவிட்டு வாகனத்தை திருப்பியபோது அவருக்கு பின்னால் வந்த அரசு பேருந்து வேகமாக வந்து இரு சக்கர வாகனத்தில் மோதி விபத்து ஏற்பட்டது.

அந்த பேருந்தின் ஓட்டுநரை நான் பார்த்தேன். நான் ஓடிச்சென்று பார்த்தபோது தலையிலும், இடது கையிலும் பலத்த காயங்கள் ஏற்பட்டிருந்தது. உடனடியாக அவரை ஆம்புலன்ஸ் வரவழைத்து கரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கும், அவரது மகனை நாச்சிமுத்து மருத்துவமனைக்கும் சிகிச்சைக்கு அனுப்பி வைத்தோம். சம்பவம் குறித்து நான் சுப்பிரமணியின் மனைவிக்கு தகவல் தெரிவித்தேன். சம்பவத்திற்கு பின்னிட்டு சுப்பிரமணி என்பவர் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். **(எதிரியை அடையாளம் காட்டுவதற்காக முதல் விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).**

| | |
|---|---|
| | சாட்சி கூறிய சாட்சியத்தை எதிரியின் முன்னிலையில் என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு பின்னர் சாட்சியிடம் படித்துக் காட்டி சரியாக உள்ளது என்று ஒப்புக் கொண்டு சாட்சியால் கையெழுத்திடப்பட்டது.<br>(ஓம்.என்.எஸ்.ஜெயபிரகாஷ்)<br>தலைமை குற்றவியல் நடுவர்<br>கரூர் |